JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **32/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | பாபு | Village | |
| Father's Name | துரைராஜ் | Taluk | |
| | | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 30.06.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் பெருந்துறை, கருமாண்டிசெல்லிபாளையம் கிராம நிர்வாக அலுவலகத்தில் உதவியாளராக வேலை பார்த்து வருகிறேன். 21.07.2008 ம் தேதி இரவில் ஒரு வழக்கு சம்பந்தமாக அவ்வழக்கின் எதிரியை விசாரிக்க வேண்டும் என்பதற்காக பெருந்துறை, கருமாண்டிசெல்லிபாளையம் கிராம நிர்வாக அலுவலரையும், என்னையும் பெருந்துறை காவல் நிலையத்திற்கு வருமாறு கேட்டுக் கொண்டதால் நானும், கிராம நிர்வாக அலுவலர் பொன்னுச்சாமியும் பெருந்துறை காவல் நிலையத்திற்கு மறுநாள் 22.07.2008 ம் தேதி அன்று காலை 7.45 மணிக்கு சென்றோம். அங்கிருந்த அவ்வழக்கின் எதிரியான அருண்ஜோதி என்பவரை எங்களுக்கு காட்டி இவரை விசாரிப்பதால் அந்த வாக்குமூலத்தில் கிராம நிர்வாக அலுவலர் கையொப்பமும் மற்றும் என்னுடைய கையெழுத்தும் சாட்சி கையொப்பமாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் மணியக்காரர் பொன்னுச்சாமி அருள்ஜோதி

கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாகவும், நான் இரண்டாவதாகவும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். என்னிடம் காட்டப்படும் அருள் ஜோதி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி அருள்ஜோதி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் விஜயமங்கலம் அருகில் லாரியில் இருந்த Safety லாக்கரில் இருந்து பணம் ரூ. 30,000 எடுத்ததை கூறினார். அந்த பணத்தை 4 நபர்கள் பங்கு பிரித்து கொண்டதாக கூறினார். பணத்தை மொத்தமாக செலவு செய்து விட்டதாகவும் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார். இது தவிர நான் இதற்கு முன்பாக வேறு எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் முதலாவதாக மணியக்காரர் பொன்னுச்சாமியும், இரண்டாவதாக நானும் சாட்சி கையொப்பங்களை செய்தது நினைவில் உள்ளது. என்னை பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதியது என்றால் போலீசார் எழுதினார்கள் நானும், கிராம நிர்வாக அலுவலரும் எழுதவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எவ்வளவு நேரம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள் என்றால் 1 மணி நேரம் அளித்திருப்பார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் மொத்தம் 2 தாள்கள் உள்ளது என்றால் சரிதான் அதில் ஒரு தாளில் மட்டும் தான் என்னுடைய கையெழுத்தும், கிராம நிர்வாக அலுவலரின் கையெழுத்தும் உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.9 ஆவணத்தில் 3 வது பக்கத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான் நான் கையெழுத்து செய்ததற்கு மேல் சுமார் 4 வரிகள் எழுதும் அளவிற்கு இடைவெளி உள்ளது என்றால் சரிதான்.

2. ஒப்புதல் வாக்குமூலம் போலீசார் முன்னிலையில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் விசாரணையின் போது உடனிருக்கவில்லை என்றால் சரியல்ல. வெற்றுத்தாளில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. என்னுடையஅலுவலகத்தில் இருந்த கிராம நிர்வாகஅலுவலரும் நானும் கையெழுத்து மட்டும் போட்டு கொடுத்து விட்டோம் என்றால் சரியல்ல. அதனால் தான் எந்த போலீசார்

**எங்களை விசாரித்தார்கள் என்று என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. போலீசாருக்கு ஆதரவாக, எதிரிக்கு எதிராக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை